# அரிட்டாபட்டி



**'கழிஞ்சமலை'** என்னும் பெயரில் இவ்வூரில் அமைந்துள்ள மலை தமிழ்மக்களின், குறிப்பாக பாண்டியநாட்டு மக்களின் பண்பாட்டுச் சின்னமாகும். சுமார் 2300 ஆண்டுகட்கு முன்பாகவே இம்மலையில் நெல்வேலிச்செழியனும் இலஞ்சிவேளும், இங்கு நல்லறத்தைப்போதிக்க வந்த சமணத்துறவிகளை ஆதரித்துள்ளனர். அவர்கள் வாழ்ந்த குகைப்பள்ளி இளமைநாயகிபுரம் பகுதியில் அமைந்துள்ளது. இக்குகைப்பள்ளி **'முழாகை'** என்ற அழகுத் தமிழ் சொல்லால் அழைக்கப்பட்டுள்ளது. இங்குள்ள தமிழ் பிராமி கல்வெட்டுக்கள் இவ்உண்மையைச் சொல்கின்றன.

**'நெல்வெளிய் சிழிவன் அதினன் வெளியன் முழாகை கொடுபிதோன்'**
**'இலஞ்சி எளம்பேராதன் மகன் எமயவன் இம்முழாகை கொடுபிதவன்'**

என்பன இங்குள்ள தமிழ் பிராமி கல்வெட்டின் வாசகங்கள் இவை சுமார் 2300 ஆண்டுகளுக்கு முற்பட்டவை.

இக்கல்வெட்டு உள்ள குகையில் பத்துக்கும் மேற்பட்ட துறவியர் தங்கியிருக்கலாம்.

இக்கல்வெட்டின் அருகிலேயே சுமார் 10 அடி தொலைவில் மற்றுமொரு கல்வெட்டும் ஒரு சமண தீர்த்தங்கரின் சிற்பமும் காணப்படுகின்றன. விரிந்த தாமரை மலரின்மேல் அர்த்தபரியங்காசன ஆசனத்தில் முக்குடைதரித்த அண்ணல் அமைதிதவழும் புன்னகையோடு அமர்ந்திருக்கிறார். பக்கத்தில் இரு குத்துவிளக்குகள், தலைப்பகுதியில் பூ வேலைப்பாடுகள் அவற்றிலும் வண்ண ஓவியங்கள் பாண்டியர் நுண்கலைத்திறனை வெளிப்படுத்தும் விதமாகவே வரையப்பட்டுள்ளன.சிற்பத்தின் கீழே வெட்டப்பட்டுள்ள கி.பி. 10 ஆம் நூற்றாண்டு வட்டெழுத்து கல்வெட்டு இம்மலையின் வரலாற்றைப் பேசுகிறது. இம்மலையின் பழம்பெயர் கழிஞ்சமலை இல்லை இது **திருப்பிணையன்** மலை என்கிறது. இதற்குத் தெப்பம் என்பது ஒரு பொருள். பிறவிப் பெருங்கடலை நீந்த உதவும் தெப்பமாகத் தீர்த்தங்கரர் இருக்கிறார் என்பதையே இக்கல்வெட்டு உணர்த்துகிறது. இவ்வூரின் பெயர் 'பாதிரிக்குடி' என வழங்கியதையும் இக்கல்வெட்டே கூறுகிறது. இவ்வூரில் **பொற்கோட்டுக்கரணத்தார்** என்னும் குழுவினரின் பெயரில் **அச்சணந்தி** என்னும் துறவி இச்சமணத்திருமேனியைச் செய்துள்ளார். இது சுமார் 900 ஆண்டுகளுக்கு முற்பட்டது. தற்போதுள்ள இவ்வூரின் பெயர் அரிட்டநேமி என்ற 22 வது சமணசமயத் தீர்த்தங்கரரின் பெயரால் ஏற்பட்டதாக இருக்கலாம்.

ஸ்ரீ திருப்பிணையன் மலை
போற்கோட்டுக் கரணத்தார் பேரால்
அச்சணந்தி செயவித்த திருமேனி
பாதிரிக் குடியார் ரக்ஷை

என்பது இங்குள்ள வட்டெழுத்துக் கல்வெட்டின் வாசகமாகும்.



**குடைவரைக்கோவில்**

இவ்வூரில் இன்னுமோர் கலைக்கருவூலம் மலையின் மறுபக்கத்தில் அமைந்துள்ள எழிற்கோலம் கொண்ட குடைவரைகோவில் ஆகும். சிவபெருமான் இலிங்க வடிவமாகக் காட்சி தரும் இக்கோவில் பாண்டியர் கலைக்கோர் மகுடம். **லகுளீசர்** என்னும் அற்புதத் திருவுருவமும், விநாயகரின் பொலிவும், கிராமத்து போர் வீரரோ என்றும் வியக்கும் வாயிற்காவலர் சிற்பங்களும் கல்லில் வடிக்கப்பட்ட கனிகள். தமிழ்நாட்டில் மிக அரிதான சிற்பமான **லகுளீசர்** இதுபோன்ற எழிலோடு எங்குமில்லை. லகுளீசர் கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் குஜராத்தில் காயோவரோகன் (கார்வான்) என்ற இடத்தில் பிறந்தார். சைவ சமயத்தை முறைபடுத்தி தம் சீடர்கள் மூலம் இந்தியா முழுவதும் பரவச்செய்தார். இச்சமயத்திற்குப் **பசுபதசைவம்** எனப்பெயர். பிற்காலத்தில் இந்தியாவின் பல்வேறுபகுதிகளில் இது பல்வேறு வடிவம் பெற்றது. இச்சைவம் 6ஆம் நூற்றாண்டில் காரைக்கால் அம்மையார் வழியாகவும் 7ஆம் நூற்றாண்டில் அப்பர், ஞானசம்பந்தர், வழியாகத் தமிழகமெங்கும் பரவி வளர்ந்தது. இக்குடைவரைகோவிலைப் படைத்து உருவாக்கிய சிற்பியின் பெயரோ அல்லது அவனுக்கு பொருள் கொடுத்த மன்னனின் பெயரோ இங்கு கல்வெட்டாக வெட்டப்படவில்லை. இதன் பெருமையை உணராத மக்களோ இதனை **இடைச்சி மண்டபம்** என அழைக்கின்றனர்.

இவ்வூரின் வரலாற்றுத்தொடர்ச்சி இத்தோடு முற்றுப்பெற்றுவிடவில்லை. இவ்வூரில் திறந்த வயல்வெளியில் ஒரு சிதைந்து போன பாண்டியர் சிவன்கோவில் உள்ளது. அதிலுள்ள ஒரு கல்வெட்டு **ஜடா வர்மன் விக்கிரம பாண்டியன்** காலத்தது. சுமார் 700 ஆண்டுகளுக்கு முன்பாக இவ்வூர் ஒரு சிறந்த வணிக மையமாகத் திகழ்ந்தது என்பதைக் கூறுகிறது. இக்கல்வெட்டால் ஐந்நூற்றுவப் பெருந்தெரு எனப்பெயர் இப்பகுதிக்கு இருந்துள்ளது என்பதை அறிய முடிகிறது. திருமலை நாயக்கர் காலத்தில் இப்பகுதியில் அந்நியர் படை புகாமல் காத்து மக்களுக்கு அறிவிக்கை செய்த ஒறி சேவகனுக்கு வழங்கப்பட்ட மானியம் பற்றிய விபரத்தை இவ்வூரில் கிடைத்த செப்பேடு ஒன்றும் கூறுகிறது.